www.tamilarangam.net



புரட்சி-1 எண்ணம்-1

# புரட்சி

4 FEB 1978

★ கலைப்பெருமன்ற வெளியீடு ★

நான் எப்பொழுதும் மனிதகுல விடுதலைக்கான போராட்ட அணிவகுப்பில் நிற்க விரும்புகிறேன் எங்கோ ஒரு மூலையிலல்ல; அணிவகுப்பின் முன்னிலையில் நிற்கவே விரும்புகின்றேன். = ஆஸ்ரோ வன்கி

# தமிழினமே கிளர்ந்தெழு!

# பாசிசம் ஆள்கிறது!

அந்நிய ஏகாதிபத்தியம் இலங்கையில் இருந்து அரசியல் ரீதியில் வாபசாகிய தினம் 1948ம் ஆண்டு, மாசி, 4ம் திகதி தான். யார் எதைக் கூறினாலும் கூட, 1948ம் ஆண்டு மாசி 4ம் திகதி நிகழ்ச்சி தமிழினத்தின் வரலாற்றிலும் முக்கியதொரு நாளேயாகும்.

இன்றும் இலங்கையை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆண்டு கொண்டிருந்தால், நம்முடைய தனிநாடு கோரிக்கையையும், போராட்டத்தினதும் தன்மை பற்றி சிந்தித்துப் பாருங்கள். உலகின் ஐந்து பெரு வல்லரசுகளின் ஒன்றாக பிரிட்டன் இன்றும் திகழ்கின்றது. உலகின் வறிய நாடுகளையும், வலிமை குறைந்த நாடுகளையும் குறிப்பாக வெள்ளை இன மக்களற்ற ஆசிய ஆபிரிக்க நாடுகளை தனது படைப்பலத்தின் மூலம் நீண்டகாலம் அடக்கியாண்டு, …ட்டச் சுரண்டிய முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் அன்றைய தலைமையே இந்த பிரிட்டன் தான். இத்தகைய பெரும் வல்லரசை எதிர்ப்பதாக நமது இனத்தை இல்லாமல் ஆக்கிய திருநாள் (…ம் பக்கம் பார்க்க)

**எமது சிந்தனை:-**

தமிழ் பேசும் மக்களின் கரங்களில் மாதந்தோறும் தவழ இருக்கின்ற "புரட்சி" என்ற புரட்சிகர இதழின் முதல் வெளியீடு பாசிச (FASCISM) எதிர்ப்பு நாளான மாசி 4ம் தேதி, பெரிய பிரித்தானியா "கலைப்பெரும் மன்றத்தின்" மூலம் வெளியிடப்படுகின்றது. இம் முதலாவது இதழ் கையெழுத்து பிரதியாக வெளிவரினும், அடுத்துவருகின்ற இதழ்கள் அனைத்தும் அச்சுப் பதிப்பாக வெளிவரும் என உறுதி அளிக்கின்றோம்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்குரலாக "புரட்சி" வெளிவரும். "புரட்சி" தமிழ் பேசும் மக்களை முன்னேற்றியில், புரட்சிக்கு தயார் செய்யும் வண்ணம், உண்மைகளை அடித்துரைக்கும், புதிய கருத்துக்களை எடுத்துரைக்கும் ஒரு பொதுக் குரலாக அமையும் என நம்பலாம்.

உங்கள் ஆதரவு தமிழின விடுதலையை துரிதப்படுத்துமென நம்பி "புரட்சி"யை வெளியிடுகின்றோம். - கலைப்பெரு மன்றம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(1ம் பக்கத் தொடர்ச்சி) 1948 மாசி 4ம் திகதிதான்.

நாம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்பதில் பின் வாங்கவில்லை. ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் உலகளாவிய முற்போக்கு சக்திகளின் போராட்டத்தில் நாமும் முன்நிற்க இன்றல்ல என்றுமே தயார் தான். ஆனால், இச் சிங்கள ஏகாதிபத்தியத்தின் படைகளை எதிர்க்க இன்னமும் கூட தயாராகாத சிறிய 35 இலட்சம் சனத்தொகை கொண்ட தமிழினத்திற்கு பெரிய வல்லரசினை எதிர்க்கின்ற சக்தி எப்போது வரும் என்கின்ற சிந்தனை, 4-2-1948 இல் பிரிட்டிசார் இலங்கையில் இருந்து வாபசாகியதை வரவேற்கின்ற நம் கருத்துக்கு, ஆதாரமாக அமையும். 4-2-'48 எப்படி வரலாற்றின் மறக்க முடியாத நாளோ, அதுபோலவே இன்றைய (4-2-78) தினமும் இன்னொரு வகையில் சரித்திர முக்கியத்துவம் பெற்றதாகி விட்டது.

இன்றைய தினம் பெரியவர் ஜே. ஆர் தன்னை சர்வதிகாரியாக்கிய நாள்தான். இலங்கை சரித்திரத்தின் சாபக்கேடே இந்த ஜே. ஆர் தான். தமிழினம் அடைந்துள்ள இன்றைய அவல நிலைக்கு காரணகர்த்தாவே இவர்தான். இப் பத்திரிகையினது பிறிதொரு பக்கத்தில் ஜே. ஆரின் சாதனைகளை காணுகின்ற நீங்கள் திகைக்காதீர்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாயான இந்த ஜே. ஆர் தன்னை சர்வதிகாரியாக்கிக் கொள்வதன் மூலம் எமது போராட்டத்தை பலவீனப்படுத்துகின்றார். உலகில் நீண்ட காலம் நிலைபெற்று, அழிவுகள் பல செய்த சர்வதிகாரிகளை நினைவு கூருங்கள். எவ்வளவு பெரிய போராட்டங்களை இலகுவில் நசுக்கின்ற வல்லமை பெற்றவர்களாக, அவர்கள் விளங்கினார்கள் என்பதை சரித்திரம் சொல்லும். இப்படியான சர்வதிகாரிகளுக்கு உதவுவதற்கென்றே காத்து நிற்கின்றது அமெரிக்க முதலாளித்துவம்.

எனவே, இலங்கைத் தமிழினத்தின் வாழ்நாள் முழுவதும் அழிவுகள் பல செய்த ஜே. ஆரும், U.N.P யும் இந்த இன்னமும் கூட செய்வதற்கு புதிய வலிவு பெறுகின்றது.

இன்று முதல் தமிழினம் உரிமை பெறும் வரை - சுதந்திரம் பெறும் வரை, பெப். 4ம் திகதியை யு.என்.பி எதிர்ப்பு, ஏகாதிபத்திய, முதலாளித்துவ எதிர்ப்பு, பாசிச எதிர்ப்பு நாளாக அனுசரிக்க வேண்டும்.

அடுத்து வரும் இதழ்களில்

* கட்டுரைகள் * கவிதைகள் * பேட்டிகள்
* கேள்வி - பதில்கள் என்பனவும் இடம் பெறும். — ஆசிரியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அறிமுகம்:- தோழர் பொன். சத்தியசீலன்**

தமிழ் இளைஞர்களுக்கு மிக மிக அறிமுகமான இவர் யாழ்ப்பாணம் உரும்பிராயை பிறப்பிடமாகக் கொண்டவர், இலங்கை பல்கலைக்கழகப் பட்டதாரி. பல்கலைக் கழகத்திலும், வெளியிலும் "தமிழ் இன" நோக்கிற்காக இயக்கம் நடத்தியவர். 1970 இல் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக தமிழ் இளைஞர்கள் மத்தியில் இடம் பெற்ற புதிய உணர்வுகளுக்கும், இயக்கங்களுக்கும் கால்கோளாக இருந்தவர். நாலாண்டுகளுக்கு மேலாக இலங்கை அரசின் வெஞ்சிறை கரங்களுக்கு மத்தியில் வாழ்ந்தவர். இன்று தமிழின விடுதலைக்கு களம் அமைத்து நிற்கும் தமிழர் விடுதலை இயக்கத்தின் (TLO) வெளிநாட்டு சிறப்பு பிரதிநிதியாக இயங்குகின்றார். அவரின் தொடர் கட்டுரை இவ் இதழிலிருந்து வெளிவரும்.

# புறப்படுங்கள் போராட!!

- சத்தியசீலன்

உலக வரலாற்றில் பல கால கட்டங்களில் தனி சிறப்புடன் வாழ்ந்த தமிழினம் இன்று பல நாடுகளிலும் அடிமை இனமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றது. உலகின் பல நாடுகளுக்கும் சென்று வணக்கத் துக்குரிய தனி நாயகம் அடிகளார் தமது நூல்களிலும், உரைகளிலும் உலகில் வாழும் 7½ கோடி தமிழரின் அழிவு நிலையினை எடுத்து விளக்கியுள்ளார். ஒரு சில இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இனங்கள் சுதந்திர நாடுகளில் இறைமையுடன் தமது கலாச்சாரம், மொழி என்பவற்றைப் பேணிப் பாதுகாத்து வாழும் போது நாம் மட்டும் ஏன் அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்

20ம் நூற்றாண்டின் மத்திவரை அடிமை இனமாக வாழ்ந்த ஆபிரிக்க மக்கள் இன்று இறைமையுடையவர்களாகவும் அடிமை பட்டிருக்கும் தம்மின மக்களுக்கு ஆதரவும் தெரிவித்து வருகின்றனர். அவர்கள் அந்நிய ஆதிக்கத்திற்கும், சர்வதிகாரத்திற்கும் எதிராகப் போராடி தமது தனிநாடுகளை அமைத்து வருகின்றனர். அதே வேளை ஒரு காலகட்டத்தில் உலக நாடுகளுக்கே உரிய வழிகாட்டியாக இருந்த தமிழினம் இன்று தம் சொந்த மண்ணிலேயே அடிமைகளாக்கப்பட்டுள்ளனர். இது ஒரு கால கட்டத்தின் விளைவு என்று ஒதுங்கிராமல் மீண்டும் நிலைநிறுத்த வேண்டாமா? அதனால் தான் அழைக்கின்றேன் புறப்படுங்கள் போராட என்று.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் இழந்த நாட்டுரிமையை யூதர் 1948 இல் போராடிப் பெறலாம் என்றால், 1619 இலும், 1803 இலும் போத்துக்கேயர் இடமும், ஆங்கிலேயரிடமும் முறையே சங்கிலியனும் - பண்டாரவன்னியனும் இழந்த எம் ஆட்சி உரிமையை மீண்டும் பெற நாம் ஏன் போராடக்கூடாது. பலஸ்தீனியர் தமது நாட்டை மீண்டும் அமைக்க போராடுவதும், தென் ஆபிரிக்க மக்கள் சிறுபான்மை வெள்ளை அரசுக்கு எதிராக போராடுவதும், எமக்கு எடுத்துக் காட்டுவது எதனை? நாமும் இழந்த இறைமையை மீண்டும் பெற போராட்டமே வழி என்பதையல்லவா?

(4ம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



18ம், 19ம் நூற்றாண்டுகளில் கனடாவில் போய் குடியேறினர் பிரான்சுக்காரரும், ஆங்கிலேயரும். இன்று பிரான்சுக்காரர் கியூபெக் மாகாணம் இன்னோர் பிரான்சு நாடாக வேண்டுமென போராடுவதை நாம் காணுகின்றோம். தம் நாட்டில் வாழ முடியாது இன்னோர் நாட்டில் போய் குடியேறி தமக்கென இன்னோர் நாடு அமைக்கப் பிரான்சுகாரர்கள் போராடலாம் என்றால் நாம் வாழ்ந்த நாட்டில், நாம் இழந்த இறைமையைப் பெற, நாம் ஏன் போராடக்கூடாது

19ம் நூற்றாண்டுவரை இங்கிலாந்தில் மட்டும் வாழ்ந்த ஆங்கிலேயர் இன்று அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்-ஆபிரிக்கா, றொடீசியா, அமெரிக்கா, கனடா எனக் குடியேறிப் பல நாடுகளைத் தமக்கென சொந்தமாக ஆக்கி கொண்டனர். நாமும் பல நாடுகளில் போய் குடியேறினோம். என்ன? ஆட்சியாளராகவா? சர்வதேசக் கூலிகளாக!! 11ம் நூற்றாண்டில் சோழ மன்னர்கள் தென் கிழக்கு ஆசிய நாடுகளை கைப்பற்றி பேரரசு அமைத்தனர். அந்நாடுகளை இன்றும் நாம் கட்டி ஆள்கின்றோமா? இல்லை. எம் பரம்பரையா இன்றும் அந்த நாடுகளில் வாழ்கின்றது. எமக்கு இந்த நிலை ஏன் ஏற்பட்டது. போய் குடியேறிய நாடுகளிலும் நாங்கள் அடிமைகள்! எம் சொந்த மண்ணிலேயும் நாம் அடிமைகளோ? இதிலிருந்து எமக்கு மீட்சி வேண்டாமா? ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பையும் - சித்தாந்த வேறுபாட்டையும் வைத்து கியூபா- வியட்நாம் - கம்போடியா என நாடுகள் மீண்டும் மலரலாம் என்றால் எம் பிணத்துக்கு எதிராக இலங்கையிலும் - இந்தியாவிலும் உள்ள ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக நாம் ஏன் போராடக் கூடாது.

ஈழத்தில் எமக்கென இருக்கும் தேசியப்பேரவைக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி 1976ம் ஆண்டு மே மாத வட்டுக்கோட்டை பிரகடனத்தில் ஈழத்தில் தமிழீழம் என தனிநாடு அமைப்பது தான் தமது இறுதி முடிவாக பிரகடனப் படுத்தினர். அதனையே 1977ம் ஆண்டு யூலையில் நடந்த பொதுத் தேர்தலிலும் மக்கள் முன் வைத்து பூரண சம்மதத்தைப் பெற்றனர்.

சிங்களப் பாராளு மன்றம் தமிழர்களை மனிதர்களாக மதித்து பிரிந்து போங்கள் என்று சொல்லும் பெரும் மனம் கொண்டதல்ல. இலங்கைப் பாராளு மன்றம் தமிழர் நோக்கில் பேச்சு வார்த்தைக்கும் விவாதங்களுக்கும் உரிய இடமேயன்றி தனிநாடு பெற்றுத்தரும் சாதனமல்ல. எனவே, இன்றைய சமகால வரலாற்றில் உலகில் ஏனைய நாடுகள் சுதந்திரம் பெற எந்த வழி முறையைக் கையாண்டனவோ அவ்வழியில் நாமும் செல்ல வேண்டியதாகின்றது. எமது அரசியல் தலைவர்கள் பாராளு மன்றத்திலும், வெளியிலும் சமாதான முறையில் போராடுவோம், முடியாவிட்டால், ஆயுதப் போராட்டமே ஒரு வழி என்பதைக் கூறி வருகின்றனர். அதே வேளை இளைஞர் ஆயுதப் போராட்டம் ஒன்றே இறுதி வழி என்று 1970ம் ஆண்டில் இருந்து செயல் பட்டு வருகின்றனர். (தொடரும்)

www.tamilarangam.net



ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கிறதே
வாருங்கள் நாமும் பிடிப்போம்
வடத்தை என்று
வந்தான் ஒருவன்
வயிற்றில் உலகத்தாய் நொந்து
-சுமந்திருந்த நூறாண்டு
வாழ்வதற்காய்
பெற்ற மகனோ அவனும் பெருந்தோளும்,
கைகளும், கண்ணில் ஒளியும் கவலையிலா
உய்ய விழையும், உளமும் உடையன் தான்
வந்தான் அவன் ஓர் இளைஞன்

— "மஹாகவி"

நாளையிங்கு
நல்லதோர்
உலகை நாங்கள்
நிறுவுவோம்!
ஏழைச் செல்வர்
இன்றியோர்
இனிய வாழ்வு
காணுவோம்!

— மாவை
நித்தி

எந்தும் வளம்பூத்துக் தனிமைச் செந்தமிழில்
பொங்கும் புதுக் கலைகள் பூத்தொளிர்க்க - தமிழர்
இன்னல் தீர - சங்கம் முழங்கித்
தமிழ்த் திரு நாடு பெற்றிட வருக.

-"சாவி"-

<u>அதிஷ்ட லாபச்சீட்டிழுப்பு:-</u>

கலைப்பெருமன்றத்தினுல் நண்பர்களுக்காக நடத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு 29-1-78 பகல் 11.00 மணிக்கு கீழுள்ள முகவரியில் அமைந்த தற்காலிக பணிமனையில் நடைபெற்றது.

| | | | |
|---|---|---|---|
| பரிசு-1. | 2518 | C. VARGHESE | 77, MORAY ROAD, N4 |
| 2. | 1354 | S. SIVANATHAN | 552, LIPTON St., WINNIPEG |
| 3. | 713 | M. SATKUNANATHAN | 82, TYRWHITT ROAD, SE4 |
| 4. | 1794 | F. AL. HABEB | TYCOCH, SWANSEA |
| 5. | 110 | K. RAJAN | 1, BEACONS FIELD ROAD SOUTHALL |

விற்பனையில் இருந்து திரும்பி வராத புத்தகங்கள் குலுக்கலில் இடம் பெறவில்லை. விபரம் வேண்டுவோர் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

ஒத்துழைத்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

5, PARKFIELD ROAD
LONDON SE14

— சி. சிவதில்லைநாதன்
இணைச் செயலாளர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


PURADCHCHI
4.2.78

**மனித சக்தி**

காலம் காலமாகவே மகிழ்ச்சிக்கான அற்புதங்களை கடவுள் தான் நிகழ்த்துவதாக மக்கள் கனவு கண்டனர். ஆனால், மக்கள் தான் அத்தகைய கதா நாயகன் என்றும் **சோசலிசமே** அவ்வற்புத வலிமையை அளிக்கிறது என்றும் எங்களின் அனுபவம் நாட்டுகின்றது

— **பிரஸ்னேவ்**

# யார் இந்த ஜே.யார்?

1944 இல் "தனிச் சிங்களமே" இலங்கையின் அரச கரும மொழியாக வேண்டுமென சுதந்திரத்திற்கு முந்தைய சட்ட சபையில் முதன் முதலில் தீர்மானம் கொண்டு வந்தவர் இந்த ஜே ஆர் தான்.

2. 1956 இல் சொந்த ஊரான களனியிலிருந்து, மற்றொரு சிங்கள ஆர். ஜி. சேனநாயக்காவினால் தோற்கடிக்கப்பட்டு கொழும்புக்கு துரத்தப்பட்டவர்தான் இந்த ஜே. ஆர்.

3. 1958 இல் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு ஓரளவு ஆறுதல் தீர்வுகாண உதவுமென கருதப்பட்ட "பண்டா - செல்வா" ஒப்பந்தத்தை எதிர்த்து இனவெறிப் பிரச்சாரங்களுடன் கண்டிக்கு பாதையாத்திரை போனபோது இடையில் வைத்து, திரு எஸ். டி. பண்டார நாயக்காவின் தலைமையிலான சாதாரண சிங்கள மக்களினால் அடித்து துரத்தப்பட்டவர் இந்த ஜே ஆர் தான்.

4. 1958 இல் சிங்கள - தமிழ் இனக்கலவரத்தைத் தூண்டியதன் மூலம் தமிழ் மக்கள் பெருமளவில் கொலை செய்யப்படுவதற்கும், மானபங்கப்படுவதற்கும் காரணமாக இருந்தவர் இந்த ஜே. ஆர் தான்,

5. 1972 இலங்கை குடியரசு ஆக்கப்பட்ட போது "பௌத்தமே" அரசமதமாக்கப்பட வேண்டுமென டட்லியுடன் சேர்ந்து தீர்மானம் கொண்டு வந்தவர் அந்த ஜே ஆர் தான்.

6. 1975 இல் எதிர்க்கட்சித் தலைவராக யாழ்ப்பாணம் வந்த போது பெரிய பேச்சுக்களின் எதிரொலியாக, பகிரங்க கூட்டமே வைக்க முடியாமல் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு துரத்தப்பட்டவர் இந்த ஜே ஆர் தான்.

7. 1977 இல் பிரதமராக உள்ளபோது, தமிழ் மக்களைப் பார்த்து "போரா - சமாதானமா" என்று பாராளுமன்றத்தில் வைத்துக் கேட்டு, மற்றொரு 1958 எனக் குருதிப் பலியும் பெருந் இன அழிப்பு, மானபங்கம், சொத்து அழிப்பு நடவடிக்கைகளுக்கு தூண்டுகோலாக இருந்தவர்தான் இந்த ஜே. ஆர்.

இந்தப் பெரியவரையா - பாசிஸ்ட்டையா தமிழ் மக்களாகிய நீங்கள் ஆதரிக்கின்றீர்கள்?

இல்லையென்று நிரூபிக்க இனியாவது தயாராகுங்கள்,

PRINTED AND PUBLISHED BY S SIVATHILLAINATHAN 22, GURDON ROAD LONDON SE7 ON BEHALF OF KALAIPERUMANTRAM

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்